Registered as a Newspaper

வட இலங்கையின் ஒரே ஒரு விளம்பர முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சேர்விஸ்
மேபா. யாழ் பிச் இன்ஸ்
139, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

வட இலங்கையில் ஒரே ஒரு விளம்பர முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சேர்விஸ்
மேபா. யாழ் பிச் இன்ஸ்
139 கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்.

சுடர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ ஆவணி மீ 19 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 துல்ஹஜ் பிறை 28 (04-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் - 247

★ 4 முகாம்களைச் சுற்றித் தடைக் காவல்
★ கறிச்சட்டிப் பாலம் தகர்ப்பு
★ தண்ணீர், மின்சார சேவைகள் ஸ்தம்பிதம்

# மன்னார் நகரம் முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டில்!

## பகலில் மக்கள் வெளியேற்றம்; இரவிரவாக வேட்டுச் சத்தங்கள்

மன்னார், செப்டம்பர் 4

மன்னார் நகரம் நேற்றுக் காலையில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது.

மன்னார் கோட்டை, தள்ளாடி முருங்கன், தலைமன்னார் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுதபடி போராளிகள் தடைக்காவல் செய்தனர்.

அதைத் தொடர்ந்து நகரம் எங்கும் போராளிகளே நவீன ஆயுதங்களுடன் காணப்பட்டனர்.

பகலில் கடைகள் பூட்டப்பட்டன பாடசாலைகள், அலுவலகங்கள் நடக்கவில்லை. மக்கள் நகரத்தை விட்டுத் தூர இடங்களுக்குச் சென்றனர் பிற்பகலில் மின்சார, நீர் விநியோக சேவைகள் ஸ்தம்பித்தன

நேற்று இரவு ஏழு மணி தொடக்கம் விட்டுவிட்டு துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன

இதுபற்றித் தெரிய வருவதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் செவ்வாய்க்கிழமை இரவு தொடர்ந்தும் மன்னார் நகரில் நிலை கொள்ளத் தொடங்கினர்.

இதனைத் தொடர்ந்து நகரின் குடியிருப்பாளர்கள் பெருமளவிலோர் எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, இலுப்பைக்கடவை பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்லத் தொடங்கினர்.

நேற்றுக் காலை முதல் மன்னார் நகரில் நவீன ஆயுதங்களைத் தாங்கிய விடுதலைப் புலிகள் போராளிகளின் நடமாட்டமே பெருமளவில் காணப்பட்டது.

அரச ஆயுதப்படையினர் காணப்படவில்லை.

பெண் போராளிகளும் காணப்பட்டனர்.

**ஷெல் தாக்குதல்**

காலை 8 மணியளவில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன

காலை 11 மணியளவில் தள்ளாடி ஆயுதப்படை முகாமில் இருந்து நகரை நோக்கி 'ஷெல்' தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் பனங்கட்டிக் கொட்டு என்னும் இடத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் பெண் உயிரிழந்தார் என்றும் இரண்டு பேர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நல்லூரில்

பூக்காவனம்

மாலை 4 மணிக்கு திருக்கல்யாணம். 5 மணிக்கு தங்கரதத்தில் வெளிவீதியுலா.

மாலை 6 15 மணிக்கு நாவலர் மணி மண்டப வளவில் பொன். சுந்தரலிங்கம் தெய்வீகத் தமிழிசை வழங்குவார்.

மாலை 6 30 மணிக்கு ஆலய மேற்கு வீதி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் திரு வை. நித்தியானந்த சர்மாவினுல் "சேவலும் மயிலும்" என்ற பொருளில் கந்தபுராணத் தொடர் பிரசங்கம் நடைபெறும்.

## சுபநேரம்

4—09—1986
வியாழக்கிழமை

சுபநேரம்:
7 35 முதல் 9 05 வரை
ராகுகாலம்:
1 35 முதல் 3 05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## எம். ஜி ஆர் பயணமானார்

புதுடில்லி, செப் 3

தமிழக முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் இன்று அதிகாலை விமானம் மூலம் நியூயோர்க் புறப்பட்டார் புரூக்லின் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக அவர் மனைவி ஜானகியுடன் சென்றார். கூடவே நரம்பியல் நிபுணர் டாக்டர் நரேந்திரனும் சென்றார்.

தமிழக அமைச்சர்கள் பலர் அவரை விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தனர். (உ-எ)

## மன்னாரில் பொலீஸார் மரணம்

மன்னார் நகரில் நேற்றுப் போராளிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலீஸ்காரர் உயிரிழந்தார் என்று அரசு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## யாழ்ப்பாணத்தில் எஸ். பி. பதவி காலி

### ஒருவரும் ஏற்கத் தயாரில்லையாம்

கொழும்பு, செப். 4

யாழ்ப்பாணம்பொலீஸ் அதிபர் பதவி காலியாக உள்ளது.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. பி. உடுகம்பொல இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் அப்பதவியை நிரப்ப பொலீஸ் திணைக்களம் முயற்சி செய்து வருகின்றது.

ஒரு சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி பதவியை ஏற்க முன்வருகிறார்கள் இல்லை.

யாழ் பொலீஸ் அதிபர் பதவிக்குப் பெரும்பாலும் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட பொலீஸ் அதிபர் சுகயீன விடுமுறையில் சென்றுவிட்டார்.

வவுனியா முகாம்பொலீஸ் அதிபரான சரத் பொரலெஸ் என்பவர் யாழ்ப்பதில் பொலிஸ் அதிகாரப் பணிபுரியும்படி பணிக்கப்பட்டிருக்கிறார். (உ-எ)

## ஈழம் தபால்தலை நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், செப் 4

நாளை வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு ஈழம் தபால்தலை வெளியிட்டு விழா நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறும் என ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் அறிவித்திருக்கிறது

நாளைய தினம் முதல் இந்தத் தபால் தலைகள் யாழ் குடாநாட்டிற்கு முழுவதும் வரும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிறப்புச் சொற்பொழிவுகளுடன் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும் —

நாளைய தினம் குடாநாடு முழுவதும் முத்திரை உறைகள் விற்பனை செய்யப்படும் என்றும் —

இந்த விழாவில் சக இயக்கப் பிரதிநிதிகளும், வெகுஜன இயக்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என்று ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## வயாவிளான் பகுதியில் வானத்தாக்குதலுக்கு ஒத்திகை?

### பொம்மர்கள், ஹெலிகள் சுற்றின

பலாலி, செப் 4

இராணுவம் வயாவிளான் மகாவித்தியாலயத்தில் மீண்டும் நிரந்தரமாக நிலைகொண்டு விட்டது. நேற்று அங்குள்ள முகாமைச் சுற்றி ஹெலிக்கொப்டர்களும், இரண்டு பொம்மர்களும் பலதடவை சுற்றிப் பறந்தன.

விமானங்கள் அடிக்கடி பறந்தது. இப்பகுதியில் வானத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒத்திகையாக இருக்கலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்

செவ்வாய்க்கிழமையிற் பகல் 6 மணியளவில் பலாலியை நோக்கி வந்த இரண்டு பொம்மர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் நேற்றும் வயாவிளானின் இராணுவ நிலை கொண்டுள்ள மகாவித்தியாலய முகாமின் மேற்புறமும் சுற்றின.

போராளிகள் வயாவிளான் முகாமை நோக்கியும், குரும்பசிட்டியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முகாமினை நோக்கியும் மோட்டார்க் குண்டு, ரொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டனர். அதன் பின்னர் சிலமணிநேரத்தில் பலாலியில் இருந்து பொம்மர் விமானங்களும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆகஸ்டில் 17 படையினர் பலியாகினர்

கொழும்பு, செப். 4

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஆயுதப்படையினர் மீது 59 தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

அவற்றின் விளைவாக 17 படையினர் இறந்தனர்; 39 பேர் காயமடைந்தனர். இப்படி கொழும்புப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (உ-ஐ-எ)

## முச்சந்தி முனி



யாழ்ப்பாணம் வாறதைப் பற்றியே ஒவ்வொரு அரசியல் வாதியும் அடுத்தவருக்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கட்டும். நடக்கப் போறது ஒன்றுமில்லை எல்லாம் நேரம் கடத்திற வீண் பேச்சுக்கள் தான்..!

# சர்வதேச நீதிமன்றில் விசாரிக்கக் கோரி 2 தமிழ் இளைஞர் மனு

## ஐ. நா. பொதுச் செயலாளருக்கு!

கொழும்பு, செப்டம்பர் 4

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு இரண்டு தமிழ் இளைஞர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரைக் கோரும் கடிதம் எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விமல் விக்கிரமசூரியாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

இதுபற்றிய விவரம் வருமாறு:

மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர்கள் பொடியற் சிரப்பிரமணி, சுப்பிரமணியம் தம்பிநிதி ஆகியோர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அச்சமயம் இளைஞர்கள் தங்கள் சட்டத்தரணி மூலம் 1-9-86 திகதி இடப்பட்ட மேற்படி எட்டு பக்கக் கடிதத்தை நீதிபதியிடம் சமர்ப்பித்தனர். அக் கடிதம் ஐ. நா. பொதுச் செயலாளருக்கு முகவரி இடப்பட்டிருந்தது

தமிழர் இறைமை தமிழருக்கு எதிரான இன ஒழிப்பு, விடுதலைப் போராட்டத்தில் தமிழர் பங்கு ஆகியவை பற்றிய விவரங்களும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன (உ-ஐ-எ)

## உமாவுடன் தொடர்பால் 400 சிங்கள இளைஞர் ஒருவாரத்தில் கைது

கொழும்பு, செப். 4

கடந்த வாரத்தில் இருந்து இதுவரை தமிழ்த் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சுமார் நானூறு சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் உமா மகேஸ்வரனின் அமைப்புடன் இவர்கள் தொடர்பு வைத்திருந்தவர் என்று பொலீஸ் வட்டாரங்கள் சந்தேகிப்பதாகக் கூறப்படுகிறது (உ-எ)

## தமிழ் முஸ்லிம் அகதிகளுக்கு உதவி

அம்பாறை, செப் 4

கல்முனைக் கரையோரத்தில் மீண்டும் அகதிகளான தமிழ், முஸ்லிம் குடும்பங்களுக்கு சமூக சேவைத் திணைக்களம் இலவச உணவுப் பொருள்கள் வழங்குகின்றது.

ஆயிரத்து 370 தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த 8,768 பேருக்கும்—

சுமார் 1,500 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 8,000 பேருக்கும் இந்த உதவி வழங்கப்படுகிறது. (உ-ஏ-14)

# என்னை அழைத்துக் கொண்டு போருக்குப் போகமுன்னர் ஜனாதிபதி ஒருதடவை வடக்கே போய்வரட்டும்

## சிறிமாவோ சவால்

கொழும்பு, செப் 4

என்னையும் மகாசங்கத்தையும் அழைத்துக் கொண்டு போருக்குப் போவார் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறிவருகின்றார்.

என்னை அழைத்துக் கொண்டு போவதற்கு முன்னர், ஜனாதிபதி ஒரு தடவை யாழ்ப்பாணம் போய்த் திரும்பி வரட்டும்.

அதற்குப் பின்னர் எம்மை அழைத்துப் போவது பற்றி யோசிக்கலாம்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடுகண்ணாவையில் நடந்த மாகாண சபைக்கு எதிரான பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் சொன்னார்.

மாலை இக் கூட்டம் நடைபெற்றது

இரத்தக்களரி நிறுத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்கிறோம். அதற்கு மாகாணசபை தீர்வாகாது.

தமிழர்களுக்கு ஐ. தே. கட்சி பொய் வாக்குறுதிகளை வழங்கியதே, தீவிரவாதம் தோன்றக் காரணம்.

மாகாணசபைச் சட்டம் தமிழருக்குத் தனியான அரசாங்கம் ஒன்றை வழங்கவே கொண்டு வரப்படுகிறது

இது பெரும்பான்மை இனத்துக்குச் செய்யப்படும் துரோகத்தனமான செயலாகும்.

சின வெடிச் சத்தம் கேட்டாலே சிங்களவர்கள் ஓடிப் பதுங்குகிறார்கள் சரித்திரத்திலேயே சிங்களவர்கள் இப்படிப் பயந்து ஓடியது கிடையாது

இதற்குக் காரணம் நாட்டுக்குச் சரியான தலைமை இல்லாததே மக்கள் தங்கள் பாதுகாப்பைத் தாங்களே பார்த்துக் கொள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினை: இந்தியா நேரடியாக மத்தியஸ்தம் செய்யும்

புதுடில்லி, செப். 3

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விஷயத்தில் இந்தியா நேரடியாக மத்தியஸ்தம் செய்து வைக்கவுள்ளது.

இம்மாதம் 7 ஆம் திகதி ஹராரேயில் இருந்து புதுடில்லி திரும்பிய பின்னர் பிரதமர் காந்தி இது குறித்து இறுதித் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வார் என்றும் ஒரு செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (உ-ஐ-எ)

## பொலீஸ் குழுவைத் தடுத்து நிறுத்திய தொழிலாளர்கள்

கொழும்பு, செப் 4

நாவலப்பிட்டி, வெஸ்ற்ஹோல் தோட்டத்தினுள் நுழைய முயன்ற பொலீஸ் கோஷ்டி ஒன்றைத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தடுத்து நிறுத்தினர்

அதனையடுத்து அங்கு வந்து சேர்ந்த விசேட பொலீஸ் கோஷ்டி ஒன்று நடத்திய தாக்குதலில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் சிலர் காயமடைந்தனர் என்று தெரிகிறது

இச் சம்பவம் கடந்த திங்களன்று இடம்பெற்றது.

தோட்டத்துரை செய்த முறைப்பாடு ஒன்றை விசாரிப்பதற்காக வந்த பொலீஸாரையே தோட்டத்துக்குள் நுழைய விடாமல் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் தடுத்து நிறுத்தினர் என்று தெரிகிறது (உ-ஐ-எ)

## கூட்டணியினர் சிதம்பரம் சந்திப்பு

சென்னை, செப் 3

கொழும்பில் நடந்த பேச்சுக்கள் பற்றிய விவரங்களை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், இணை அமைச்சர் பா சிதம்பரத்தைச் சந்தித்து விளக்கி கூறினர். (உ-ஐ-எ)

## செய்தியாளர் மாநாடு திடீரென ரத்து

கொழும்பு, செப் 4

அமைச்சரவைக் கூட்ட முடிவில் நடத்தப்படும் செய்தியாளர் மாநாடு நேற்று நடத்தப்படவில்லை.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்று நண்பகல் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் திடீரென மாநாடு நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## 8 ஆம் திகதி மகாசங்கம் ஆராயும்

கொழும்பு, செப். 4

மாகாணசபை யோசனைகளை சட்டமாக்கும் அரசின் முயற்சிகளுக்கு எதிராக என்னவிதமான நடவடிக்கைகளை எடுப்பது என்பது பற்றி மகா சங்கம் இம் மாதம் 8 ஆம் திகதி கூடி தீர்மானிக்கவிருக்கின்றது. (உ-எ)

## பொலீஸ் தினம் இல்லை

கொழும்பு, செப் 4

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்த பொலீஸாருக்கு மரியாதை செலுத்தும் முகமாக இன்று பொலீஸ் தினம் கொண்டாடப்பட மாட்டாது என்று பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது (இ-ஐ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தாமரையானது தண்ணீரில் இருந்தால் தான் செழிப்புற்று இருக்கும். அதேபோல் நமது மனம் கருணை (அன்பு) என்னும் குளத்தில் இருந்தால்தான் சாந்தமாக இருக்கும்.

— காஞ்சி முனிவர்


# உதயன்

உண்மை - திறமை - நடுநிலைமை

இல 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

04-09-86 த.பெ.23


## லலித்தின் போர்க்கோலம்

தீவிரவாதிகளுக்கு எதிரான இறுதித் தாக்குதலை நடத்த அரசு திட்டம் வகுத்து வருகிறது.

இப்படி அறிவித்திருக்கிறார் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முயற்சிகள் தொடங்கப்பட்ட பின்னர்— அரசியல் கட்சிகள் மாநாடு தொடங்கிய பின்னர் — குறிப்பாக அரசு - கூட்டணிப் பேச்சு தொடங்கிய பின்னர் சற்று மௌனமாக இருந்தார் அமைச்சர் லலித். இப்போது மீண்டும் மௌனத்தைக் கலைத்துப் போர்க்கோலம் பூண்டிருக்கிறார்!

சமாதானப் பேச்சுகள் தொடங்கிய பின்னர் அமைச்சர் லலித்தும், ஏனைய அமைச்சர்களும் மாகாண சபை குறித்து மெத்தப் பிரமாதமாகப் பேசி வருகிறார்கள். அது வந்ததும் இந்த நாட்டில் இனப்பிரச்சினை இல்லாமற் போய்விடும் என்று நம்புகிறார்கள் யார் நம்பாவிட்டாலும் அவர்கள் நம்புவதாகப் பேச்சின் தொனிகள் இருக்கின்றன.

அரசு — கூட்டணிப் பேச்சு ஆரம்பத்தில் தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்க இயலாது என்று தெரிவித்தவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள் திரு. லலித்தும், திரு காமினி திஸநாயக்காவும் ஆவர்.

ஆனால் அரசு — கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் கடைசி நாளன்று வடக்கு—கிழக்கு இணைப்பு விடயத்தில் ஏதோ ஒரு விதத்தில் விட்டுக் கொடுக்கும் வகையில் அரசின் போக்கு அமைந்து இருந்தது.

தமிழ் மொழிப் பிராந்தியத்துக்குப் பதிலாக அரசு முன் வைத்த மூன்று அம்சத்திட்டம் அந்தப் போக்கையே காட்டியது. மாற்றுத் திட்டத்தைக் கூட்டணியிடம் மட்டுமல்லாமல் தூதுவர் திரு ஜே என் டிக்ஸிற் மூலம் இந்திய அரசுக்கும் அது தெரியப்படுத்தியது.

இவ்வாறு நிலைமை மாறிக் கொண்டிருக்கும்போது அமைச்சர் லலித், மீண்டும் தாக்குதல், முறியடிப்பு என்று போர்க்கோலம் போடத் தொடங்கியிருப்பது சந்தேகத்தைத் தருகிறது.

தமிழர் அபிலாஷைகளை, குறைகளைத் தீர்க்கும் விதத்தில் இனப்பிரச்சினைக்கு சாதகமான ஒரு தீர்வைக் கொண்டு வருவது கஷ்டம் என்று அரசாங்கம் கண்டுபிடித்துவிட்டதா?

தமிழர்களுக்குச் சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என்பனவற்றை வழங்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு சிங்கள மக்களிடம் இருந்து வரும் எதிர்ப்பைச் சமாளிக்கத் தமக்குத் திராணி இல்லை என்பதை அரசும், அமைச்சரும் தெரிந்து கொண்டனரா? உணர்ந்து விட்டனரா?

இனப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடாது அல்லது தமிழர்களுக்குச் சாதகமாக அவர்களது உரிமைகள் எதையும் வழங்கக்கூடாது என்று அரசு தனது உளமார்ந்த எண்ணத்துக்குச் செயலுருக் கொடுக்க விரும்புகிறதா?

அதற்காக சமாதானப் பேச்சுவார்த்தையை 'அணுப்புல்' விதத்தில் தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிடுகிறதா?

மேற்கண்ட நான்கு கேள்விகளில் அரசு கடைசி வினாவையே ருசுப்படுத்த— செயலாக்க விரும்புவதாகக் கொள்ள வேண்டி இருக்கிறது.

கோட்டை இராணுவ முகாமைப் பலப்படுத்துங்கள் வயாவிளான் இராணுவ முகாமில் மீண்டும் நிலை கொள்ளுங்கள் கல்முனையில் கலவரத்தை அடக்க இராணுவத்துக்குப் பதில் அதிரடிப்படையை அனுப்புங்கள்.

இவ்வாறு அரசாங்க மேலிடம் கடந்த வாரம் விடுத்த உத்தரவுகள் அதனையே ஊர்ஜிதம் செய்கின்றன.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று முழக்கம் செய்யும் கூட்டமல்லவா அரசு?

காலத்துக்குக் காலம், வேளைக்கு வேளை இரண்டு வேடங்களையும் மாறி மாறிப் போட்டால் தான் 1989 வரை அரசியல் நாடகம் நடத்தலாம் என்ற எண்ணமோ?

சமாதான விரும்பிகளே, இந்தியாவே, சர்வதேசங்களே இது உங்களுக்குச் சமர்ப்பணம்!

## வடக்கே வந்த இலவச பாட நூல்கள் இன்னும் 50 ஆயிரம் தேவை

இதுவரை யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கென நாலரை லட்சம் இலவச பாட நூல்கள் கல்வியமைச்சால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இன்னும் ஐம்பதாயிரம் நூல்கள் வரை தேவை.

இவ்வாறு கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாலரை லட்சம் நூல்கள் மூன்று கட்டங்களாக வந்து விநியோகிக்கப்பட்டன. முதல் கட்டமாக 1,17,172 நூல்களும் இரண்டாம் கட்டமாக 1 15,766 நூல்களும் மூன்றாம் கட்டமாக சென்றவாரம் 2,20 817 நூல்களும் வந்துசேர்ந்தன.

அவையாவன 6 ஆம், 8 ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழி, 7 ஆம், 9 ஆம் ஆண்டுக்கான ஆங்கிலம் என்பனவாகும்.

7 ஆம், 8 ஆ , 9 ஆம் ஆண்டுகளுக்கான விஞ்ஞானம், சமூகக்கல்வி, கணிதம் என்பன அச்சில் உள்ளன. (இ-5)

# சகல விடுதலை இயக்கங்களுக்கும் அணிசேரா நாடுகளின் ஆதரவு

## மாநாட்டில் பிடல் காஸ்ட்ரோ வேண்டுகோள்

ஹராரே, செப் 3

உலகெங்கிலும் உள்ள சகல விடுதலை இயக்கங்களுக்கும் அணிசேரா நாடுகள் ஆதரவு அளிக்கவேண்டும்

இவ்வாறு அணிசேரா மாநாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றுகையில் கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ வேண்டுகோள் விடுத்தார்.

உலகெங்கிலும், குறிப்பாகத் தென் ஆபிரிக்காவில் உள்ள விடுதலை இயக்கங்களுக்கு முழு அளவிலான ஆதரவு அளிக்கப்படவேண்டும் தென் ஆபிரிக்காவில் போதா ஆட்சியை அழித்து ஒழிக்க வேண்டும்.

தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் இருக்கும் வரை அங்கோலாவில் கியூபா துருப்புக்கள் இருக்கும்

இவ்வாறு காஸ்ட்ரோ தனது உரையில் தெரிவித்தார். (உ-ஒ)

### லத்தீன் அமெரிக்காவில் அடுத்த மாநாடு ?

ஹராரே, செப் 3

அணிசேரா நாடுகளின் உச்சிநாநாடு அடுத்த தடவை எங்கு நடைபெறவேண்டும் என்பதை முடிவு செய்வதற்காக இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி பல தலைவர்களைச் சந்தித்து உரையாற்றினர்.

லத்தீன் அமெரிக்காவில் அடுத்த மாநாடு நடைபெற வேண்டும் என்ற பொதுவான கருத்து பல தலைவர்களிடம் நிலவி வருகின்றது

நிக்கராகுவா ஜனாதிபதி டானியல் ஒட்டேகா தமது நாட்டில் நடத்துவதற்கு அனுமதி கோரியுள்ளார். (உ-ஒ)

வெளி உலகில்

# ஈராக்கின் எண்ணெய் மேடை ஈரானின் வசம்?

டெஹ்ரான், செப். 3

ஈராக்கின் கரைக்கு அப்பால் முக்கியமான எண்ணெய் மேடையான அல்ஹமீதலைக் கைப்பற்றியதாக ஈரான் அறிவித்தது.

வளைகுடாவின் வடக்கு போர் முனையில் ஈரானுக்கும் ஈராக்கிற்கும் மேலும் பலத்த மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் ஈராக்கின் பிரதேசத்துக்குள்ளே உள்ள ஹஜ்உரான் மலைப் பகுதிகளில் ஈரான் தாக்குதலை விஸ்தரித்தது

இத்தாக்குதலை முறியடிக்கும் வகையில் தாங்கள் பல ராணுவ சேந்திர நிலையங்களின்மீதும் வளைகுடாவில் கப்பல்கள் மீதும் விமானத்தாக்குதல் மேற்கொண்டதாக ஈராக் தெரிவித்தது

ஆனால் இதற்கு மறுப்புத் தெரிவித்த ஈரான், ராணுவ நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் முக்கிய 'ராடர்' கருவி பொருத்தப்பட்ட அல் ஹமீத் எண்ணெய் மேடையை ஈரானியப் படைகள் கைப்பற்றிவிட்டதாகத் தெரிவித்தது. (உ-ஒ)

### ஸிம்பாப்வேக்கு அமெ. உதவி நிறுத்தம்

வாஷிங்டன், செப். 3

ஸிம்பாப்வேக்குபொருளாதாரஉதவிகளை நிறுத்துவது என அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அணிசேரா நாடுகளின் புதிய தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் ஸிம்பாப்வேக்கு அரசியல் நேர்மை இல்லையெனவும் அமெரிக்கா குற்றம் சாட்டியது.

அமெரிக்க அரசின் இந்த முடிவால் ஸிம்பாப்வேக்கு கிடைத்து வரும் பலலட்சம் டாலர் உதவி கிடைக்காமல் போய்விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

### எம். ஜி. ஆருக்கு நரம்பியல் பரிசோதனை

புதுடில்லி, செப் 3

தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் மருத்துவ பரிசோதனைக்காக நியூயோர்க் சென்றதும் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான பேராசிரியர் பெரட் குலன் முதலில் வைத்திய பரிசோதனை செய்வார்.

இன்று அவர் புதுடில்லியிலிருந்து நியூயோர்க் பயணமானார். (உ-ஒ)

### பிரிவினைக்கு கண்டனம்

புதுடில்லி, செப். 3

காலிஸ்தான் என்ற பெயரில் தனிநாடு கோருவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்று.

—இவ்வாறு மகாராஷ்டிரத்திலுள்ள பல சீக்கிய ஸ்தாபனங்கள் ஒன்றாக அறிக்கை விட்டுள்ளன. (உ-ஒ)

### மிஸோவில் புதிய கட்சி

புதுடில்லி, செப் 3

மிஸோ சட்டப் பேரவையின் மிஸோ தேசிய முன்னணி, மற்றும் காங்கிரஸ் (ஐ) உறுப்பினர் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடாளுமன்ற கட்சி என்ற புதிய கட்சியை உருவாக்கியுள்ளார்கள். (ஒ)

# கப்பல் விபத்தில் அறுநூறு பேர் பலி

மாஸ்கோ, செப் 3

கடந்த ஞாயிற்றுக் கிழமை கருங்கடல் பகுதியில் ரஷ்ய பயணிகள் கப்பலொன்று சரக்குக் கப்பலுடன் மோதிக்கொண்டதில் சுமார் 600 பேர் பலியாகினர்.

சரக்குக் கப்பலுடன் மோதிய சிறிது நேரத்தில் பயணிகள் கப்பல் நீரில் மூழ்கியது.

உயிர் இழந்தவர்களின் சடலங்கள் கடலிலிருந்து மீட்கப்பட்டு வருகின்றன.

மீட்புப் பணியினரால் இதுவரை 836 பேர் காப்பாற்றப்பட்டனர்.

கப்பல் மூழ்கும்போது அதில் 1600 பேர் இருந்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-ஒ)

### ஆப்கானுக்காக வல்லரசுகள் சந்திப்பு

மாஸ்கோ, செப். 3

ஆப்கானிஸ்தான் பிரச்சினைகள் தொடர்பான வல்லரசுகளின் பேச்சுகள் நேற்று மாஸ்கோவில் ஆரம்பமாகின.

இந்தப் பிரச்சினையில் தகவல்பரிவர்த்தனையைக் குறிக்கோளாகக் கொண்ட விவாதங்கள் இம்மாதம் 19 ஆம் திகதி வாஷிங்டனில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் எட்வேட் செவர்னட்சேயிற்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸுக்கும் இடையே தொடங்கும் சந்திப்புக்கு ஓர் அடிப்படையாக அமையும். (ஒ)

### லெபனன் யுத்த நிறுத்த உடன்படிக்கை

பெய்ரூட், செப். 3

லெபனனில் கடந்த பதினொரு ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும்

இதற்கான போர் நிறுத்த உடன்படிக்கையொன்றையும் தேசிய சாஸனம் ஒன்றையும் லெபனன் அமைச்சரவை ஏற்படுத்த இணங்கி உள்ளது. (ஒ)

# துர்க்காபுரத்தில் அருள் புரியும் அன்னை

## இன்று கொடியேற்றம்

சபா.புஷ்பநாதன்

வட இலங்கையில் மிகப்புராதனமான துர்க்காதேவி ஆலயம் சைவப் பெருமக்களால் போற்றப்படும் தலங்களுள் ஒன்று. நகுலகிரித் தீர்த்தம் — மாவைக்கந்தன் ஆலயம் என்பனவ அருகில் இருக்க கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் இவ்வாலயம் விளங்குகின்றது.

துர்க்கையின் பிரதான தலமாகிய துர்க்காபுரத்தில் இவ்வாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்ட காலமோ அல்லது அத்திருத் தொண்டைச் செய்த பெரியாரின் பெயரோ அறிய முடியாதன்னதால் கர்ண பரம்பரைச் செய்திகளைக் கொண்டுதான் சில ஆரம்ப நிகழ்ச்சிகளை அறிய முடிகிறது.

தெல்லிப்பழையிலுள்ள வவுணவத்தையைச் சேர்ந்த கதிர்காமர் என்னும் பெரியார் தலயாத்திரைக்காக வட இந்தியாவுக்குச் சென்றார்.

அங்கு பல தலங்களையும் தரிசித்தபோது அறுபத்து நான்கு சக்தி தலங்களிலும் வாசி சொர்ப்பனேஸ்வர பீடத்தில் உள்ள துர்க்காதேவியே சகல சக்தி அம்சங்களிலும் நிறைந்ததாக அவருக்குத் தோன்றியது

அவர் இலங்கைக்குத் திரும்பும்போது வெண்கலத்திலான துர்க்கை இயந்திரம் ஒன்றையும் திருமுக வெண்டி ஒன்றையும் கொண்டு வந்தார்.

தமது சொந்த நிலமான உழுதுப் பதியில் அவற்றைத் தாபனம் செய்து பூஜித்தார்

இதுவே இன்று வேண்டுவோர் வேண்டுவதெல்லாம் ஈயும் துர்க்காதேவி தேவஸ்தானமாக மாறியுள்ளது.

அன்னறும் இக்காலத்தில் அம்மாளின் ஆலயம் நோக்கிப்பத்தர்கள் பக்தி சிரத்தையுடன் செல்வதை இன்றிலிருந்து பன்னிரு தினங்கள் காணலாம்.

பூரண பிரம்ம ஸ்வரூபிணியாகவும், வேண்டிய யாவும் வழங்கும் அன்னையாகவும், சித்தர்களின் தலைவியாகவும் இருக்கும் துர்க்காதேவி, பசி, தாகம், ஒளி, சோம்பல், தயை, கருத்து, பொறுமை, பிரமை, ஞானம், மகிழ்ச்சி, செல்வம், வீரம், மாயை ஆகியவற்றிற்கு அதி தேவதையாக இருக்கிறாள்.

பற்றினவரை பாதுகாக்கும் தேவி அவள்.

'எப்போது அரக்கர்களால் துன்பம் உண்டாகிறதோ அப்போது நான் அவதரித்துப் பகைவர்களை நாசம் செய்வேன்' என வாக்கு அளித்துள்ளாள்.

எமது மண்ணிலே 'அரக்கர்கள்' தோன்றிவிட்டார்கள். எனவே துர்க்கை அவதரிப்பதையும் அரக்கர்களை அவள் அழிப்பதையும் வேண்டி நின்று கோடி கண்களும் துர்க்கையை பிரார்த்திப்பது நியாயமானதே.

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### சுடரோங்க அருள் காட்டு !

தஞ்சமென வந்தனது
தாம் பணியும் அடியவர்க்கு
அஞ்சேல் என அபயம்
அளித்தவன் நீ — இன்றெங்கள்
பிஞ்சு மழலையுடன்
பெற்றவர்கள் உற்ற சொந்தம்
வஞ்சகரால் இனம் மடிய
வடிவேல் நீ ஏன் மௌனம்?

நல்லைப் பதி வாழும்
நாயகனே நெஞ்சிருத்தி
அல்லும் பகலும் தொழும்
அடியார்கள் துயர் களைந்து
"வெல்லும் மனுநீதி
வேலிருக்கப் பயமெதற்'' கென்(று)
சொல்லும் முருகு தமிழ்ச்
சுடரோங்க அருள் காட்டு !

— லக்ஸ்மன்

சமய சந்திகளில்

### அருள்மிகு துர்க்காதேவி மகோற்சவம்

யாழ்ப்பாணம், செப் 4

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 8 .00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 13 ஆம் திகதி மாலை 7 மணிக்கு சப்பறமும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஒ)



பொய்யாமொழி

குறள் :

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள்:

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறு போல, உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம்

# கவலைகள் நீங்க வழி

## நல்லை சொற்பொழிவில் விளக்கம்

யாழ்ப்பாணம், செப் 4

இறைவனோடு தொடர்பு இல்லாதவை எல்லாம் துன்பமயமே சிலர் அவற்றையே இன்பமாக எண்ணி ஏமாந்து போகின்றனர்

இறை தரிசனம் பெறுதல், திருவடி சேர்தல் ஆகியனவே நிலையான இன்பமாகும். இந்தப் பேரின்ப நிலையில் மனதைப் பழக்கினால் கவலைகள் தானாக ஒழியும்.

—இப்படி ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் சொன்னார்.

'கவலைகள் போக வழி' என்னும் பொருள் பற்றி நல்லை ஆதீனத்தில் கடந்த ஞாயிறு அவர் பேசினார்

அவர் மேலும் சொன்னதாவது;

இறைவன் திருவடியைச் சேர்ந்தவர்களுக்கே மனக்கவலையைப் போக்க முடியும் என்பது வள்ளுவன் கருத்தாகும்.

கவலைக்குக் காரணம் ஆசை, அகங்காரமமகாரங்களாகும். ஆசை என்பது பேராசை இதனைப் பேராசையெனும் பிணி என்று கூறுவார் அருணகிரியார்.

இறைவனோடு தொடர்பு கொள்ளும் அளவிற்கு ஆசை குறைகின்றது. எத்துன்பத்தையும் நீக்க வல்லவன் ஆண்டவன் ஒருவனே. எமது எல்லாவற்றையும் இறைவனிடம் கொடுத்துவிட்டால் கவலைகளினின்றும் நீங்கிவிடலாம்.

கலைப்படுகின்ற மனதை அமைதி பெறத்தக்கதான வழியில் திருப்பவேண்டும். இதனை மடைமாற்று என்பார்கள்.

எல்லோரும் இன்பம் அடையவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் எது இன்பம் என்று யாருக்கும் தெரிவதில்லை.

இறைவனோடு இசைந்த நிலையே உண்மையான இன்பம் என்பது கந்தரர் வாக்கு

நாமஜெபம், திருமுறைப்பாராயணம், தியானம், சத்சங்கம் போன்றவற்றிலே மனதை ஈடுபடுத்த வேண்டும். அங்ஙனம் ஈடுபடும் அளவிற்கு மன அமைதி பெற்றுக் கவலையும் மாறுகிறது!

இப்படி ஆத்மஜோதி முத்தையா அவர்கள் சொன்னார். (உ-எ)

# நாட்டுப் பற்றை இலக்கியத்தாலும் காட்டமுடியும்

## வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப் 4

இன்றைய சூழலில் எமக்குத் தேவை ஆயுதம் மட்டும் எனப் பலரும் எண்ணுவது தவறு. எமது நாட்டுப்பற்றையும், நாட்டின் மீது எமக்குள்ள உரிமையையும் இலக்கியத்தாலும் காட்ட முடியும். 22 ஆண்டுகளாக மல்லிகையின் பணி இதையே காட்டுகின்றது

மல்லிகை 22 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய திரு. இ. ஜெயராஜ் இவ்வாறு கூறினார்.

பிரபல எழுத்தாளர் வரதர் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

22 வருடங்களாக தொடர்ந்து மலர் வெளிவருவது என்பது பெரும் சாதனையே. இன்றும் சூழல் மாற, காலம் மாற ஒரு தனி மனிதனால் இப்பணி செய்வது சுலபமான ஒன்றல்ல.

எழுதுவது சுலபம். மற்றவர் எழுதத் தளம் அமைத்துக் கொடுப்பதென்பது கஷ்டமானதே இந்த வகையில் டொமினிக் ஜீவா பலரின் நன்றிக்குரியவர்.

இப்படி அவர் கூறினார்.

திரு எஸ் சட்டநாதன் பேசுகையில்: ஈழத்து எழுத்தாளர் யாவரும் ஏதாவது ஒரு வகையில் மல்லிகையுடன் தொடர்புடையவர்களே என்றார்.

திரு. எஸ் வன்னியகுலம், திரு. வ. இராசையா ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (இ - 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

